**Puducherry Agro Service and Industries Corporation Limited**
(A Govt. of Puducherry Undertaking)
AGRO HOUSE, THATTANCHAVADY, PUDUCHERRY - 605 009
GSTIN : 34AAACP4374P1ZO
MD : 0413-2269001 E-mail : pasic1986@gmail.com

Pasic

Pondicherry WATER
Since - 1989

Ref. No. Date :............................

## ஒப்பந்தப் புள்ளி -மறு ஏல அறிவிப்பு

புதுச்சேரி மாநிலம் கருவடிக்குப்பம் பாசிக் தோட்டக்கலை பண்ணையில் உள்ள பழமரங்களின் மேல் மகசூலை டிசம்பர் 2022 ஆம் ஆண்டு முதல் நவம்பர் 2023 ஆம் ஆண்டு வரையில் அனுபவித்துக்கொள்வதற்கு மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மேலாண் இயக்குநர், பாசிக் நிறுவனம், தட்டாஞ்சாவடி, புதுச்சேரி-9 அவர்களால் வரவேற்கப்படுகிறது.

மேலும் ஒப்பந்த படிவங்களை 23.12.2022 முதல் 29.12.2022 மதியம் 1.00 மணி வரையில் தலைமை அலுவலக பாசிக் காசாளரிடம் ரூ.118/-ஐ (ரூ.100+18.00) (ரூபாய் நூற்று பதினெட்டு மட்டும்) (GST 18.00) செலுத்தி பெற்றுக் கொள்ளலாம். மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 29.12.2022 மாலை 3.00 மணி வரை பெற்றுக்கொள்ளப்பட்டு, அன்று மாலை 4.00 மணியளவில் ஒப்பந்தக்காரர்கள் முன்னிலையில் பிரிக்கப்பட்டு ஏலம் விடப்படும். மேலும் விபரங்களுக்கு பாசிக் தலைமை அலுவலகத்தை அணுகவும் மற்றும் இணையதள முகவரி: www.py.gov.in மூலம் தமிழில் தெரிந்து கொள்ளலாம்.

மேலாண் இயக்குநர்

Managing Director
PASIC, Puducherry-9.

**Puducherry Agro Service and Industries Corporation Limited**
(A Govt. of Puducherry Undertaking)
AGRO HOUSE, THATTANCHAVADY, PUDUCHERRY - 605 009
GSTIN : 34AAACP4374P1ZO
Pasic
✆ MD : 0413-2269001 E-mail : pasic1986@gmail.com
Pondicherry WATER
Since - 1989

Ref. No.

Date :.............................

## குத்தகை ஒப்பந்த படிவம்

பாசிக் நிறுவனத்திற்கு சொந்தமான கருவடிக்குப்பம் பாசிக் பண்ணையில் கீழே குறிப்பிட்டுள்ள பழ மரங்களில் 2023 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் முடிய விளையக்கூடிய மகசூல்களை டெண்டர் முறையில் குத்தகைக்கு விடப்படவுள்ளது. மரங்களின் வகைகள் மற்றும் எண்ணிக்கைகள் பின்வருமாறு.

| வ.எண். | பழ மரங்களின் விவரம் | கருவடிக்குப்பம் பண்ணை |
|---|---|---|
| 1. | தென்னை மரம் | 118 Nos. |
| 2. | சப்போட்டா மரம் | 20 Nos. |
| 3. | மாமரம் | 29 Nos. |
| 4. | பலா மரம் | 3 Nos. |

ஒப்பந்தப் புள்ளியில் கலந்து கொள்ள விருப்பம் உள்ளவர்கள் கருவடிக்குப்பம் பண்ணையில் உள்ள மரங்களுக்கு ஒப்பந்த புள்ளி படிவங்களை 23.12.2022 ஆம் தேதியிலிருந்து 29.12.2022 தேதி பிற்பகல் 1.00 மணி வரை பாசிக் காசாளரிடம் ரூ.118.00 (ரூபாய் நூற்று பதினெட்டு) செலுத்தி பெற்றுக்கொள்ள வேண்டும். (GST ரூ.18.00). (ரூபாய் பதினெட்டு)

கருவடிக்குப்பம் பண்ணைக்கு பூர்த்தி செய்யப்பட்ட ஒப்பந்த படிவங்களை மேலாண் இயக்குநர் அவர்களுக்கு 29.12.2022 தேதி மாலை 3.00 மணிக்குள் வந்தடையுமாறு உரையில் மூடிமுத்திரையிட்டு அனுப்பி வைக்கவேண்டும். ஒப்பந்த புள்ளியுடன் தொகையாக. ரூ. 5.000 (ரூபாய் ஐந்து ஆயிரம் மட்டும்) (டிடி) கேட்பு வரைவு ஓலையை மேலாண் இயக்குநர் பாசிக் என்ற முகவரியில் எடுத்து இணைக்க வேண்டும். (டிடி) இணைக்காத ஒப்பந்த புள்ளிகள் நிராகரிக்கப்படும். டெண்டர் அன்று மாலை 4.00 மணிக்கு பிரித்துப் பரிசீலனை செய்யப்படும். ஒப்பந்தப்புள்ளி பரிசீலிக்கப்பட்டு மிக உயர்ந்த தொகையை முதல் கேள்வியாகக் கொண்டு பகிரங்க ஏலம் விடப்படும் பகிரங்க ஏலத்தில் கேட்கப்படும் உயர்ந்த தொகை நியாயமானதாக இருந்தால் ஒப்புக்கொள்ளப்படும்.

மேலாண் இயக்குநர்

**Managing Director**
**PASIC, Puducherry-9.**

## நிபந்தனைகள்

1. ஒப்பந்தப்புள்ளி பரிசீலிக்கப்பட்டு மிக உயர்ந்த தொகையை முதல் கேள்வியாகக் கொண்டு பகிரங்க ஏலம் விடப்படும். ஏலதாரர் 24 மணி நேரத்திற்குள் ஏலத் தொகை முழுவதையும் அலுவலகத்தில் செலுத்தி இரசீது பெறவேண்டும் அவ்வாறு செலுத்த தவறினால் முன் பணத்தை இழக்க நேரிடும்.

2. மிக உயர்ந்த தொகை கோரியவர் தவிர மற்றவர்களின் முன்பணம் உடனடியாக திருப்பித்தரப்படும். மிக உயர்ந்த தொகை குறிப்பிட்டவர்களின் முன்பணம் காப்புத் தொகையாக அலுவலகத்திலேயே வைக்கப்பட்டிருந்து மேற்குறிப்பிட்ட மகசூல் அறுவடை தேதி முடிவடைந்த பின்னரே திருப்பித்தரப்படும்.

3. முழுத்தொகையும் செலுத்திய பின்னரே மகசூலை அறுவடை செய்ய அனுமதிக்கப்படுவார்கள்.

4. ஒப்பந்தத்தை, ஏலத்தை ஏற்றுக் கொள்ளவோ அல்லது நிராகரிக்கவோ பாசிக் மேலாண் இயக்குநருக்கு முழு உரிமை உண்டு.

5. மகசூலை ஒப்பந்தக்காரர்கள் தங்கள் சொந்த செலவிலேயே அலுவலக நேரத்தில் அறுவடை செய்ய வேண்டும். மேலும், மகசூலைப் பாதுகாக்கும் பொறுப்பு அவர்களையே சாரும்.

6. மகசூலை மரங்களுக்கு சேதம் ஏற்படுத்தாமல் அறுவடை செய்து பண்ணை மேலாளர் அனுமதி பெற்ற பின்னரே எடுத்து செல்ல வேண்டும். ஒவ்வொரு முறை மகசூல் அறுவடை செய்து எடுத்துச்செல்லும் போதும். பண்ணையில் உள்ள பதிவேட்டில் பதிவு செய்த பிறகே எடுத்துச் செல்ல வேண்டும். மரங்களுக்கோ அல்லது பண்ணைச் சொத்துக்கோ சேதம் ஏற்ப்பட்டால் ஒப்பந்தக்காரரே முழுப் பொறுப்பையும் ஏற்று நிறுவனத்திற்கு ஏற்படும் நஷ்டத்திற்கு ஈடு செய்வதுடன் இந்த நிறுவனத்தில் செலுத்தியுள்ள காப்புத் தொகையையும் இழக்க நேரிடும் மேலும், ஒப்பந்தம் ரத்து செய்யப்படும்.

7. பண்ணை வளாகத்தினுள் எந்தவிதமான வியாபார நடவடிக்கைகளும் கண்டிப்பாக வைத்துக் கொள்ளக் கூடாது.

8. மேற்குறிப்பிட்ட மகசூலைத் தவிர மரத்திற்கு ஊறுவிளைவிக்கும் வகையில் கிளைகளை வெட்டுதல் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபடக் கூடாது.

9. மகசூலைப் பாதுகாக்கும் பொறுப்பில் உள்ளவர்கள் அலுவலக சட்ட திட்டங்களுக்கு உட்பட்டு நடக்க வேண்டும்.

10. பண்ணையில் பணிபுரியும் எந்த நபரையும் காவலுக்கோ அல்லது வேறு எந்த வேலைக்கோ அமர்த்தக் கூடாது.

11. ஏலதாரர் மகசூலை அறுவடைக்கு ஈடுபடுத்தும் நபருக்கு அடையாள அட்டையை இந்த அலுவலகத்திலிருந்து பெற்று வழங்க வேண்டும். அவர்கள் மட்டுமே பண்ணை வளாகத்தினுல் அனுமதிக்கப் படுவார்கள்.

12. ஒப்பந்தப் புள்ளிகளை கோர விரும்புவர்கள் கருவடிக்குப்பம் பாசிக் பண்ணைகளை அலுவலக நேரத்தில் பார்வையிடலாம். பார்வை நேரம் காலை 9.00 மணி முதல். மாலை 5.30 மணி வரை.